| Case No. **O.S.No.5077/2019** | **P.W.2: Reenu Ponniah** | Dt:18.06.2024 |
|---|---|---|

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873 of the 18th June 2024.

## <u>குறுக்கு விசாரணை (1,2 பிரதிவாதி தரப்பில்): -</u>

நான் எனது தாயாரை மே, ஜூன் 2015 ஆம் ஆண்டு வாக்கில் மலர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். என் தாயாரின் மார்பில் வலி மற்றும் கட்டி இருந்ததால் அழைத்துக்கொண்டு சென்றேன். 2ஆம் பிரதிவாதியை எனக்கு எப்போது தெரியும் என்றால் எனது தாயாரை சிகிச்சைக்கு அழைத்துச்சென்ற பின்னர் தான் தெரியும். அதற்கு முன்பாக தெரியாது. 2ஆம் பிரதிவாதியால் என் தாயாருக்கு கொடுக்கப்பட்ட மருந்து என்ன என்றால் அதுபற்றி தெரியாது. ஆனால் மார்பு சம்பந்தப்பட்ட நலனுக்காக கொடுக்கப்பட்ட மருந்து ஆகும். Lump in Breast என்ற கட்டி குறித்து வேறு ஏதேனும் ஸ்கேன் வேறு மருத்துவமனையில் பார்த்துள்ளோமா அல்லது வேறு மருத்துவமனையில் அதுகுறித்து சிகிச்சை பெற்றுள்ளோமோ என்றால் கிடையாது. 1ஆம் பிரதிவாதி மருத்துவமனைக்கு போன பிறகுதான் முதன் முதலாக தெரியவந்தது. அதற்கான டெஸ்ட் மேற்கொள்ளப்பட்டது. அந்த டெஸ்ட்டின் பெயர் Mammogram Test என்பதாகும். மேற்படி டெஸ்ட்டை 3ஆம்

பிரதிவாதிதான் மேற்கொண்டார். அவ்வாறு டெஸ்ட் மேற்கொண்ட பிறகு என் தாயாருக்கு எழுதிகொடுக்கப்பட்ட மருந்துகளின் பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது. என் தாயார் 1ஆம் பிரதிவாதியின் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்றால் என் தாயார் உள் நோயாளியாக இருக்கவில்லை. என் தாயாருக்கு Discharge Summary ஏதேனும் வழங்கபட்டதா என்றால் இல்லை. எவ்வளவு தொகை கட்டணமாக செலுத்தப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. உத்தேசமாக ரூ.600/- இருக்கலாம். 2ஆம் பிரதிவாதி மருத்துவரிடம் ஏதேனும் தொகை செலுத்தினோமா என்றால் இல்லை. (சாட்சி தற்போது மேற்கண்ட ரூ.600/- மருத்துவர் நித்யா ராமமூர்த்தியிடம் கொடுத்ததாக கூறினார்.) மேற்படி பணத்தை செலுத்தியதற்கான ரசீது யாரால் கொடுக்கப்பட்டது என்றால் 1ஆம் பிரதிவாதியால் கொடுக்கப்பட்டது. ஜூன் 2015க்கு பிறகு மீண்டும் எப்போது மலர் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம் என்றால் தேதி நினைவில்லை. ஆனால் 2 மாதங்கள் கழித்து அழைத்துச்சென்றோம். அதுவும் Sinus சம்பந்தமான பிரச்சினைக்காக அழைத்துச்சென்றோம்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் தொடர்ச்சிகாக ஒத்தி வைக்கப்படுகிறது.)

Taken down by me in the open court and was read over to the witness and accepted and signed by him/her to be correct

V PANDIARAJ

Digitally signed by V PANDIARAJ
Date: 2024.06.18 18:09:45 +0530

Dt:18.06.2024 IV Additional Judge.